# யுவதி

காலாண்டு இதழ்

HOLY CROSS COLLEGE
ESTD 1965
IN CRUCE ET MARIA SPES NOSTRA
NAGERCOIL - 629 004



## ஏப்ரல் - ஜூன்
## 2024









**சொல்வது தெளிந்து சொல்**
**செய்வது துணிந்து செய்**

HOLY CROSS COLLEGE
STUDENT COUNCIL

# யுவதி

காலாண்டு இதழ்

ஏப்ரல் - ஜூன் 2024

ஆண்டு - 1 இதழ் - 3



**ஆசிரியர்**

முனைவர் **ம. மேபல் எடல் குயின்**

**கவுரவ ஆசிரியர்**

முனைவர் **அ. லெஸ்லி பாத்திமா**

**வெளியீட்டாளர்**

**மாணவியர் பேரவை**
**ஹோலி கிறாஸ் கல்லூரி,**
**நாகர்கோவில்**

**ஆசிரியர் குழு**

- **பி. ஷிமர்னா**
  மாணவியர் பேரவைத் தலைவி
- **ச. அஷானி**
  மாணவியர் பேரவைத் துணைத்தலைவி
- **அ. சான்ட்ரா**
  மாணவியர் பேரவைச் செயலர்
- **ச. ஸ்டெஃபீரா**
  மாணவியர் பேரவை இணைச் செயலர்

**புறநிலை ஒழுங்காற்றுநர்**

திரு. **சி. விஜய்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி)
பாளையங்கோட்டை

**உரிமையாளர்**

- முனைவர் அருட்சகோதரி **மேரி ஹில்டா**
  கல்லூரிச் செயலர்
  ஹோலி கிறாஸ் கல்லூரி, நாகர்கோவில்
- முனைவர் அருட்சகோதரி **சகாய செல்வி**
  கல்லூரி முதல்வர்
  ஹோலி கிறாஸ் கல்லூரி, நாகர்கோவில்


# தலையங்கம்

*யுவதி படைப்பாளிகளுக்கு வணக்கம்!!!*

**உங்களிடம் ஒரு 10 ரூபாய் இருந்தால் என்ன செய்வீர்கள் என அறிஞர் அப்துல் கலாமிடம் கேட்டபோது அவர் தந்த பதில் ஓடிச்சென்று புத்தகம் வாங்குவேன் என்றார். வாசிப்பைச் சுவாசிப்பாகக் கொண்டு வெற்றி பெற்றவர்கள் வரலாற்றில் ஏராளம். அதே நேரம் வாசகர்களுக்கான அறிவுணவை தன் எழுத்துகள் மூலம் அன்றாடம் அளித்து வரலாறு உருவாக வரலாற்றாளர்கள் உருவாக காரணமானவர்கள் ஏராளம்.**


**நூல் வடிவில் வாசித்துப் பழகிய மனிதர்கள் இன்று ஆடியோ, வீடியோ வடிவில் நூலைப் பெற்றுக் கொள்கிறார்கள். நொடிப்பொழுதும் ஓய்வின்றி ஓடுபவர்களுக்கு இது உதவியாக இருப்பினும் நூல் வடிவத்திற்கு இருக்கும் சிறப்பு சற்று அதிகம்தான்.**


**இளம்தலைமுறைகளுக்குப் பாடம் சொல்லவும், இளம்தலைமுறைகள் பாடம் கற்கவும், மறைந்திருக்கும் திறமைகள் வெளிக்கொணரப்படவும், வெளிப்பட்ட திறமைகள் மெருகூட்டப்படவும் சிறந்ததொரு கருவியாகத் திகழும் யுவதி எனும் படைப்பிலக்கியத்தை மாணவியரின் நுண்திறன்களை நுட்பமாய் நூல்வடிவில் சுமந்துவரும் பொக்கிஷப் பெட்டகமாகவே காண்கிறேன். இதில் எழுதிய மாணவியருக்குப் பாராட்டுகளையும் தொடரும் காலங்களில் எழுதப்போகும் மாணவியருக்கு வாழ்த்துகளையும் உரித்தாக்குகிறேன்.**

முனைவர் **ம. மேபல் எடல்குயின்**
























"The love between a dad his daughter is unbreakable".
A.K. Anthika


A dream is not that which you see while sleeping. it is something that does not let you sleep.
M Jasmine







## வண்ண ரோஜாவே வா

ராஜாவைத் தேடி வந்த ரோஜாவே
ஒரு நொடியேனும் உன்னை
நான் வாடிப்போக விடமாட்டேன்...!
மாயமந்திரத்தால் அல்ல
உன் காதல் தந்திரத்தால்.

**Fathima Aasmi K**
III Bsc Computer Science





## வாழ்க்கை

வாழ்க்கை என்பது ஓவியமல்ல
மாற்றி மாற்றி வரைய
வாழ்க்கை என்பது சிற்பம்
செதுக்கினால் செதுக்கியது தான்.

**Antony Britny Neelu**
III Bsc Computer Science

## அவனது கண்

கவிதைத் தீயைப் பற்றி எரிய
-வைத்துவிட்டான்
அவன் பார்த்த ஒற்றைப் பார்வையில்
அந்தக் கண்ணுக்காக ஒரு புத்தகமே
-போட்டு விட்டேன்
இனி என் கவிதைகளும் ஆஸ்காரின்
-வரிசையில்

**Devika I**
III Bsc Computer Science





# அம்மா

கடலில் இருக்கும் முத்துகளைப் போல
மூன்றெழுத்தான முத்தெழுத்து
தமிழ் மொழியின் சிறப்பெழுத்து
குடும்பத்தின் தலையெழுத்து
அன்புள்ள அம்மா...!!!

Antony Britny Neelu
III Bsc Computer Science

# பெற்றோர்

வாழ்விற்கு அர்த்தம் கொடுப்பது
தனக்கெனப் பங்கிடாது,
தன் குழந்தைகளுக்காகத் தான்
பார்க்காததையும் வாங்கிச்சேர்த்து
பாசத்தைக் கொட்டி கொடுக்கும்
தாய்தந்தை...!
கருவில் சுமந்த அன்னையையும்...
நிஜத்தில் சுமக்கும் தந்தையையும்...
உயிராக எண்ணி உன்னோடு
வைத்துக் கொள்...
உன் காலம் உள்ள வரை.

**M Anto Sherlin**
**III Bsc.Computer Science**



# எல்லைப் பாதுகாப்பாளி

இந்தியாவின் எல்லையைப்
பாதுகாக்கும்
ராணுவ வீரன் நான்
விடுமுறை முடிந்து மீண்டும்
கிளம்பிவிட்டேன்
தொடர்வண்டியின் அலறலை
அறுத்து என் செல்ல மகளின்
கொஞ்சும் குரலில்
அப்பா
என்றழைத்தது
நரம்பில் பூபூத்து
கண்ணில் நீர்வார்த்து
என்னை அடுத்த விடுமுறை
என்று வரும் என
நினைக்க வைத்தது



**S Mary Mathusha**
B.Com(Aided)

# அவனுக்காக

நான் உனக்காய் எழுதியது
உன்னைத் தவிர
அனைவரையும் ஈர்த்தது
அதை என் புனை பெயரில்
வெளியிட்டேன்
ஊர் கூடி ரசித்தது
அதை யாரோ எழுதியதென்று
நினைத்து நீ சேகரித்தாய்
உன்னையே நினைத்து
நான் சேகரித்தவை அவை
என்றறியாமல்



**A Anriya**
III Bsc Computer Science

# கடல்

கடலோடியின் வாழ்க்கை கடலோடே
முடியுமா?
ஆயிரம் அற்புதம் கண்டோம்
எங்கள் கடலில்
ஆயிரம் உயிர்களையும்
பறிகொடுத்தோம்
எங்கள் கடலின் மீது
உயிர்கொடுத்த கடலுக்கு
உயிரையெடுக்க
உரிமை இல்லையா என்ன?
இதுவரை பயந்தது இல்லை கடலைப்
பார்த்து !
புயலிலும் புன்னகைப்பது தான்
பரதவனின் பாணி !!
பார்ப்பவர்களின் கண்களுக்குக் கடல்
நீர் நிரம்பிய பாலைவனம்
பரதவனின் கண்களுக்குக்
கனவுகளையும் போராட்டத்தையும்
புதைத்து வைக்கும்
புனிதபீடம்



**Mary Mathusha**
B.Com (Aided)

# வழிகாட்டி

ஒரு நாடு ஊழலற்றதாகவும்
அழகான மனதைக் கொண்ட
மனிதர்களுக்கான நாடாகவும்
மாற வேண்டுமானால்
மூன்று பேர் தேவை
அவர்கள் தந்தை, தாய்
மற்றும் ஆசிரியர்.

**R Jeyarunisha**
III Bsc Computer Science



# அம்மா

உன்னை விட்டு
எத்தனை உறவுகள் மதிக்காமல்
சென்றாலும்...!உன்
உணர்வுகளுக்கு
மதிப்பளித்து உன் கண்ணீரைத் துடிப்பவள்
தான் 'அம்மா'




**R Jeyarunisha**
III Bsc Computer Science


# வெற்றி

வெற்றிபெறும்
நேரத்தைவிட
நாம்
மகிழ்ச்சியுடனும்
நம்பிக்கையுடனும்
வாழும் நேரமே
பெரிய வெற்றி


**Amala Prisha**
III Bsc Computer Science




# நட்பு

நீ அழும் போது
முதலில் ஆறுதல்
சொல்வது
நீ நேசித்தவராக
இருக்கமாட்டார்
உன்னை நேசித்தவராகத் தான்
இருப்பார்.




**J Nilopher**
III Bsc Computer Science



# காதலுள்ள மீன்கள்

கண்கள் பல கதைகள் பேசிக்கொள்ள
இதயம் சில நிமிடம் துடிக்கநிறுத்த
கனவு பல வித்தைகள் காட்ட
சந்திப்புகள் சத்தமில்லா ஓசை எழுப்பி
மீள முடியாக் காதல் நதியில் நீந்துகின்றன
சில காதலுள்ள மீன்கள்...

-டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம்

நண்பர்களே! கனவைப் பற்றிய உங்கள் மனவோட்டம் என்ன?
இன்று பலருக்குக் கனவிற்கும் கற்பனைக்கும் உள்ள வேறுபாடு தெரிவதில்லை. கற்பனை என்பது அது ஒரு உலகம், அவ்வுலகத்தில் நமக்குப் பிடித்த கதாப்பாத்திரம் நமக்குப் பிடித்த நேரத்தில் நமக்குப் பிடித்த செயலைச் செய்யும். ஆனால், அதிலிருந்து கனவு மாறுபட்டு நிற்கின்றது. கனவு என்பதைப் பல வகை அர்த்தங்களில் எடுக்கலாம் ஆசை, இலட்சியம், இலக்கு இன்னும் பல. நீ கற்பனையில் எவ்வாறெல்லாம் இருக்க விரும்புகிறாயோ அதை நிஜத்தில் அடைய உழைப்பை மட்டுமே மூலதனமாகப் பயன்படுத்தி நாம் சாதனை செய்ய உடனிருப்பது தான் உண்மையான கனவு!!



அன்றொரு நாள், வந்த நித்திரை (உறக்கம்)
கனவை அது தானே என் விண்வெளி நாயகன்
கூறிய கனவென்று என் அன்னையை வினவ
அவர் கூறினார்,
"நித்திரைக்காக(உறக்கம்) ஓடும் உன்னை,
வெற்றி முத்திரைப் பதிக்க செய்வதுதான்
உண்மையான கனவென்று".

*V.Mary Greena*
*III Bsc.Computer Science*

# வீடுகாணுதல்(1990)

தாய் கதறிய பின் சிரிக்கக் காரணமாய், அந்தப் பாதுகாப்பான குகையில் இருந்த சிங்கம் வேட்டையாட வருவதுபோல், கண் சிமிட்டி பொக்க வாயுடன் வந்த அவளை, தந்தை காண வருகிறார். நெஞ்சில் இருந்த கவலையும் குழப்பமும் நீங்கி மனைவிக்காகப் பரிதாபமும் குழந்தைக்காக ஆனந்தக் கண்ணீரும் வடிய வளர்கிறாள், இரவு காண மறந்த மொட்டு விடியற்காலை பூத்திருப்பதுபோல் பூக்கிறாள், பெண்ணாகிறாள்.

பெண்ணை பார்க்கக் கூடாது, கிட்டே வரக்கூடாது என்று சொல்லி தள்ளி வைக்கிறது குயில் முட்டையை காக்கும் காகங்கள் தூரத்திலே அப்பா கைகளைக் கட்டி, உதட்டின் விழிம்பில சிறிய புன்னகையுடன், குழப்பத்தோடு தாய் மாமாவுடன் பேசிக்கொண்டிருந்தவரை இவள் பார்க்க தாய்மாமியைத் தள்ளிவிட்டு ஓடி அப்பாவைக் கட்டித் தழுவி அழுகிறாள், “இவளை யாரும் ஒன்னும் சொல்லக் கூடாது” என்று கண் அடித்து பக்கம் இருந்தவர்களை அதட்டிச் சிரிக்கிறார்.

கல்யாண நாளில் தகப்பனின் காலில் விழும்போதுதான் தெரிகிறது இனி அப்பாவைக் காண காரணம் வேண்டும் என்று,

இருந்தாலும் மே மாதம் எல்லாம் மாம்பழம் கொடுக்கும் சாக்கில் மகளைக் காண வருகிறார் மருத்துவம் பார்த்த மருத்துவரை மறவாது காணவரும் யானைப்போல பிறந்தபோது காண வந்த தந்தை, பூத்தபோது பார்க்க வந்த அப்பா திருமணத்திற்குப் பிறகு தவறாமல் காணவந்த தகப்பனை, தலையில் முக்காடு போட்டு உறவினர் கூட்டத்தோடு தம்பட்டம் அடிக்க முதல்முறை பார்க்கப் போகிறாள், மனதில் நல்சாவு என்ற நிம்மதியோடு, கண்களில் இனி பார்க்க முடியாதென்று பெருந்துளிகளோடு...

குறிப்பு: மதுரையில் உள்ள சிறு, குறு கிராமங்களில் இறந்த அப்பாவைத் தம்பட்டம் அடித்து தலையில் காணப்போகும் நிகழ்வு இன்றும் நடக்கின்றது.

**Roni**
**III Bsc Computer Science**



# தேநீர்



தினமும் ஒரு கோப்பை தேநீர். இல்லாமல் நாள் தொடங்குவதில்லை. ஏன் நமது மனம் அடிமையாகிப் பெரிதாக என்ன செய்து விட்டது இந்தத்தேநீர் பார்க்கலாமா!

உபசரிப்புகள் யாவும் ஒரு குவளை தேநீரில் தொடங்குகிறது. பேச்சை வளர்த்து சில நல்ல முடிவு எடுக்க வேண்டிய சூழலில் முக்கியமான ஒன்றாகத் தேநீர் அமைந்து விடுகிறது.

சோமபானம் தராத போதையை நொடிப்பொழுதில் ஒரு குவளை தேநீர் தந்துவிடுகிறது. எனவே நண்பர்கள் கூடுகையில் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிப்போகிறது தேநீர். நெடுந்தூரப் பயணத்தின் பயணக் களைப்பைக் கணநேரத்தில் மாற்றிவிடுகிறது ஒரு குவளை தேநீர்.

நல்ல தேநீருக்காக நண்பர்கள் நெடுந்தூரம் பயணிப்பதும் தவிர்க்க முடியாத ஒன்று வேலைக்குப் போன உழைப்பாளிக்கு அடுத்தடுத்து வேலையைச் செய்வதற்கு வேண்டிய உற்சாகத்தை ஒரு கோப்பை தேநீர் தந்துவிடுகிறது.

ஒரு கோப்பை தேநீர்தான் இங்கே சிலருக்கு ஒரு நேர உணவாக மாறி பசியையும் போக்குகிறது. நாட்பட்ட மன வருத்தங்களையும் ஒரு குவளை தேநீர் எளிதாக மாற்றி விடுகிறது ஊழககநந ஞூழி -யில் பல மணி நேரங்கள்  கடந்தும் கதைக்கிறார்கள் காதலர்கள். தேகம் தேடுவது ஒரு குவளை தேநீர் தான்.

தேநீரைப் பருகும் போது மட்டும் கடைசி சொட்டு வரை தேநீரின் உஷ்ணம் குறையாமல் இருப்பதையே விரும்புகிறது “நா”

கையில் தேநீர் இருந்தால் வார்த்தைகள் வசப்படுகிறது. சிந்தனை விசாலமாகிறது. தேநீரைப் பற்றியே எழுதவும் வைக்கிறது. படிக்கும் மாணவர்கள் இரவு முழுக்க விழித்திருந்து படிக்க வேண்டிய தருணங்களில் உற்ற நண்பனாக உடனிருப்பது தேநீர்.

தேநீர் ஒன்றுதான் ஆனால் அதன் அனுபவம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றாய் நீண்டுகொண்டே செல்லும் முடிவே இன்றி.

திரைக்கு வராத பலநூறு கதைகள் தேநீர் கடைகளில் ஒரு கோப்பை தேநீருடன் சொல்லி முடிக்கப்படுகின்றன.

பேச மட்டும் வாய்ப்பு இருந்தால் ஓராயிரம் கதைகள் சொல்லும் காலியான தேநீரக் குவளைகள்.இறப்பு வீட்டிலும் இரவு முழுக்க விழித்திருக்க தேநீர் துணையாக வருகிறது. இரவு பணியாளர்களின் உற்ற தோழனாக தேநீர் மட்டுமே துணைக்கு வருகிறது.

தேநீர் முடிவே இல்லாதது ஆவியாக பயணிப்பது. இப்போது கூட யாரோ ஒருவர் தேநீரை ருசித்துக் கொண்டே இதைப் படிக்கலாம்.

இ. தெரஸ் வில்பா
II B.com (Aided)

# சிறந்து விளங்கு

கற்களே!
அடிவாங்குகள்
நாளைய சிற்பிகள் நீங்கள்தான்!
வைரங்களே!
பட்டை தீட்டுவதால்
மகிழுங்கள்– நீங்கள் தான்
அழகிய ஆபரணங்களில்
இடம்பிடிக்கப் போகிறீர்கள்
காகிதங்களே!
பேனாவின் குத்தல்களைக்
பொறுத்துக் கொள்ளுங்கள்
நாளைய வெற்றிக் கவிதைகள்
உங்களிடமே!
விதைகளே!
நிலத்தில் மிதிபடுவதினால்
கவலை வேண்டாம்
நாளை விளைச்சல்
நீங்கள் தான்!
மழைநீரே!
மண்ணில வீழ்வதால்
வருந்த வேண்டாம்
நிலத்தடி நீராய்
நீதான் ஒருநாள்
பீறிட்டு எழப்போகிறாய்!
சக்கரங்களே!
பாரங்களின் சுமையால்
சோர்ந்து விடாதீர்கள்
முன்னோக்கிச் செல்லுங்கள்
உங்களால் மட்டும்
வெற்றி இலக்கை அடைய முடியும்!
மாணவனே சிறந்து விளங்க!
சோதனைகளை எதிர்கொள்!
நம்பிக்கையுடன் போராடு,
சாதித்து காட்டும்
வெற்றி வீரனாக
சிறந்து விளங்கு!

A.N.Asphin Nefi
II Bsc Zoology

# பூ

மொட்டவிழ்ந்த பூ(அல்லது)
பூவையானது
இப்பூவுலகைக் கண்டு தான் ஒரு
மொட்டாகவே இருக்க
எண்ணியதோ !...
கூண்டுக் கிளி
சில கிளிகள்,
சுதந்திர ஆசையில் ஒரு
சிறையிலிருந்து
தப்பித்து மற்றொரு சிறையில்
மாட்டிக்கொள்ள
சுதந்திரச் சாவி மட்டும் எட்டாக்
கனவானது
அச்சுதந்திர கிளிக்கு....

V.Mary Greena
III Bsc.Computer Science